ஆயிரம் மதிப்பீட்டுச் செலவில் மரச்சாமான்கள் வாங்குவதற்கு கருத்துரையை அரசிற்கு அனுப்பியுள்ளார். விரைவில் முடிவு எடுத்து நடமுறைப்படுத்தப்படும்.

Staff of the Nandanam Arts College, Madras.

* 123 Q.—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the teaching staff of the Nandanam Arts College, Madras, have been transferred very often; and

(b) if so, the reasons therefor?

நந்தனம் கலைக் கல்லூரி ஆசிரியர்கள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, நந்தனம் கலைக்கல்லூரி ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் வேலை செய்த 18 உதவிப் பேராசிரியர் களில் ஐவர் மாற்றப்பட்டனர். டியூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் போன்ற இதர 18 ஆசிரியர்களில் இருவர் மட்டுமே மாற்றப்பட்டனர்.

(இ) அவசர நிர்வாக நலனை முன்னிட்டும் உயர் பதவி யேற்றம் முன்னிட்டும் இம்மாற்றங்கள் செய்யப்பட்டன.

Ex-Hindi Pandits.

* 124 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be please to state—

(a) the number of Ex-Hindi Pandits of Government (Board) High Schools in the Coimbatore Revenue District whose special pay of Rs. 10 has not yet been restored;

1972 ஆகஸ்ட் 21]

(b) whether the Government have ordered that consequent on the introduction of the two language formula Hindi Pandits and other Pandits who were in receipt of the special pay should be given protection for the drawal of the special pay also; and

(c) if so, the reasons for the non-implementation of the Government Order in this regard.

முன்னாள் இந்தி பண்டிதர்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் வருவாய் மாவட்டம், அரசு (வாரிய) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய முன்னாள் இந்தி பண்டிதர்கள் எத்தனை பேருக்கு சிறப்பு ஊதியமான ரூ. 10 மீண்டும் கொடுக்கப் படாமல் உள்ளது?

(இ) இருமொழிக் கொள்கையைக் கொண்டு வந்ததன் விளைவாகச் சிறப்புச் சம்பளம் பெற்றுவந்த இந்தி பண்டிதர்களுக்கும், பிற பண்டிதர்களுக்கும் சிறப்புச் சம்பளத்தையும் பெறுவதற்கான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(உ) ஆம் எனில், இது குறித்து அரசு ஆணையைச் செயல்படுத்தாததற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஒருவருமில்லை.

(இ) ஆம்.

(உ) "அ" வில் அளிக்கப்பட்ட விடையின் காரணமாக இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஒரு ஹிந்தி ஆசிரியர் சிறப்பு ஊதியம் எடுத்துக் கொள்ள மறுக்கிறார் என்று அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, All the ex-Hindi Pandits of Coimbatore and Nilgiris have since been paid their special pay. என்று கூறப் பட்டிருக்கிறது. ஆகவே எல்லோருக்குமே அந்தப் பத்து ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. முதலில் செகண்டரி ஸ்கூல்களில் வேலை செய்கிற கிராப்ட் டீச்சர்களுக்குக் கொடுக்கப் பட்டது. உயர் துவக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர் களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தது. அவர்களுக்குக் கொடுக்கப் பட வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

Drawing Master.

* 125 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a fully qualified Drawing Master serving in a High School, who has acquired a B.A. Degree, is eligible for incentive payment for possession of higher qualifications; and

(*b*) if so, the details thereof?

ஓவிய ஆசிரியர்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளியில் பணி புரியும் முழுக் கல்வித் தகுதி பெற்ற ஓவிய ஆசிரியர் ஒருவர், பி.ஏ. பட்டம் பெற்றிருந்தால், உயர் கல்வித் தகுதி பெற்றிருப்பதற்காக ஊக்க ஊதியம் பெறத் தகுதி யுடையவராவாரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பி.டி. அல்லது பி. எட். பட்டம் பெற்றால் மட்டுமே ஓவிய ஆசிரியர் போன்ற சிறப்புப் பாட ஆசிரியருக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுக் கப்படுகிறது. பி.ஏ. மட்டும் தேர்ச்சி பெற்றால் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை.